# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

C.C.No.5/2022

Deposition of witness for Prosecution – PW-2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அர்த்தநாரி | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | நாச்சியப்பன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 4.11.2024.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கொங்கணாபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கொளத்தூர் காவல்நிலையத்தில் 2016 ம் வருடம் தலைமை காவலராக பணியாற்றி வந்தேன். 16.12.2016 ம் தேதி காலை 8.30 மணிக்கு காவல் ஆய்வாளருடன் நானும் காவல் உதவி ஆய்வாளர் ராமசாமி என்பவரும் தண்டா ரோட்டில் அய்யம்புதூர் என்ற இடத்தில் வாகன தணிக்கை

செய்தோம். அப்போது அய்யம்புதூரிலிருந்து கொளத்தூர் நோக்கி மகேந்திரா டிப்பர் லாரி TN52W 1976 என்ற வாகனம் அதிவேகமாக வந்தது. காவல் ஆய்வாளர் உதவி ஆய்வாளர் ராமசாமி, மற்றும் நான் அந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் மணல் இருந்தது தெரிய வந்தது. காவல் ஆய்வாளர் வண்டியை ஓட்டி வந்த டிரைவர் சின்னதுரை (எ)துரையன் என்பவரை விசாரித்தபோது அரசு அனுமதி இல்லாமல் காவிரி ஆற்றிலிருந்து மணலை எடுத்து வந்து அதிக விலைக்கு விற்பதாக சொன்னார். மேற்படி சின்னதுரை (எ)துரையன் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரி ஆவார்.

அந்த இடத்தில் காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். மகசர் மூலம் டிப்பர் வண்டியையும் மணலையும் ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும் காவல் உதவி ஆய்வாளர் ராமசாமியும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். பிறகு தடயங்களையும் எதிரியையும் நிலையம் கொண்டு வர ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் துரையன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.